பாண்டியன் கோவில் கலைகள் தமிழ் ஆய்விதழ்
அறிஞர்களால் மதிப்பீடு செய்யப்படும் ஆய்விதழ்



**Pandian Tamil Journal of Temple Studies**
**Volume 1, Issue 1, November 2020** **E-ISSN: 2583-0880**

# தசாவதாரமும் நவகிரகங்களும் வரலாற்றுப் பார்வை
# Dasavatharam and Navagrahas in Historical Perspective

**அ. ராதா,** முனைவர் பட்ட ஆய்வாளர், வரலாற்றுத்துறை, அழகப்பா பல்கலைக்கழகம், காரைக்குடி.
**A. Radha,** Ph.D. Research Scholar, Department of History, Alagappa University, Karaikudi.
**ORCiD: https://orcid.org/0000-0002-1319-7514**
**முனைவர் கா. பரந்தாமன்**, உதவிப் பேராசிரியர், வரலாற்றுத்துறை, அழகப்பா பல்கலைக்கழகம் காரைக்குடி.
**Dr. G. Paranthaman**, Assistant Professor of History, Department of History, Alagappa University, Karaikudi.
**ORCiD: https://orcid.org/0000-0002-9837-9260**
**DOI: 10.5281/zenodo.5802587**

## Abstract

*Navathirupathi Temples is a set of nine Hindu temples dedicated to Lord Vishnu located in the Tiruchendur-Tirunelveli route, Tamil Nadu, India on the banks of the Thamiraparani river. All these 9 temples are classified as "Divya Desams", the 108 temples of Vishnu revered by the 12 poet saints, or Alwars. The Garuda Sevai utsavam (festival) in the month of Vaikasi (May-Jun) witnesses 9 Garudasevai, a spectacular event in which festival image idols from the nava Tirupathi shrines in the area are brought on Garuda vahana. An idol of Nammalvar is also brought here on an Anna Vahanam (palanquin) and his paasurams (verses) dedicated to each of these 9 temples are recited. The Utsav of Nammalvaris taken in a palanquin to each of the 9 temples, through the paddy fields in the area. The paasurams (poems) dedicated to each of the 9 Divyadesams are chanted in the respective shrines. This is the most important of the festivals in this area, and it draws thousands of visitors.*

**Keywords:** Dasavatharam, Navagrahas, Historical Perspective

## ஆய்வுச்சாரம்

இந்தியாவில் வேதகாலத்தை தொடர்ந்து இதிகாசக் காலங்கள் வரை விஷ்ணுவின் வழிபாட்டிற்கான இலக்கிய தரவுகள் கிடைக்கப்பெறுவது குறிப்பிடதக்க ஒன்றாகும். இவற்றுள் தென்னிந்தியா என்று குறிப்பிடப்பெறும் தமிழகத்தில் விஷ்ணுவின் வழிபாட்டிற்கான இலக்கியத் தரவுகள் சங்ககாலத்தைத் தொடர்ந்து ஒவ்வொரு காலக்கட்டத்திலும் வளர்ச்சிப் பெற்று வந்துள்ளன என்பது அறியப்படுகின்றது. சங்க இலக்கியங்கள் விஷ்ணுவை திருமால் என

Pandian Tamil Journal of Temple Studies
Volume 1, Issue 1, November 2020 E-ISSN: 2583-0880

குறிப்பிடுகின்றது. இவ்வழிபாடானது கி.பி. 6ம் நூற்றாண்டில் பல்லவர்கள் மற்றும் முற்கால பாண்டியர்களின் காலத்தில் வளர்ச்சிப் பெற்ற சைவ வைணவ சமயங்கள் பக்தி இயக்கமாக மாற்றப்பட்டு மக்களிடையே புகுத்தப்பட்டது. இக்காலத்தைத் தொடர்ந்து தற்காலம் வரை இச்சமயங்கள் போற்றப்படுவது குறிப்பிடத்தக்க ஒன்றாகும். இதனடிப்படையில் பொதுவாக சிவன் கோயில்களில் மட்டுமே நவகிரகங்களின் வழிப்பாட்டை காணமுடியும். இருந்தபோதிலும் தமிழகத்தின் தூத்துக்குடி மாவட்டத்தில் நவதிருப்பதியின் ஒரு பகுதியாக நவக்கிரகங்களின் வழிபாடுகளைக் கொண்டு பெருமாள் கோயில்கள் அமையப்பெற்றுள்ளன என்பதுக் குறிப்படத்தக்கது. சோழ நாட்டில் சைவக் கோயில்களில் நவக்கிரகங்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கப் பெற்றுள்ளதைப் போல பாண்டிய நாட்டில் வைணவக் கோயில்களில் நவக்கிரகங்களுக்கு முக்கியத்துவம் கொடுத்தது மட்டுமல்லாமல் இதனை நவதிருப்பதிகள் என்றும் அழைக்கப்பெற்று வருகின்றன. விஸ்ணுவின் தசாவதாரத்தையும் நவக்கிரக வழிபாடுகளையும் மையமிட்டு இப்பெயர் பெறுகிறது என்பதும் குறிப்பிடத்தக்கது. மேலும் இதன் சிறப்பை வெளிப்படுத்தும் நோக்கத்தோடு கட்டுரையானது அமையப்பெற்றுள்ளது

- ஸ்ரீ ராமாவதாரம் - சூரியன்
- ஸ்ரீ கிருஷ்ணாவதாரம் - சந்திரன்
- ஸ்ரீ நரசிம்மவதாரம் - செவ்வாய்
- ஸ்ரீ கல்கியவதாரம் - புதன்
- ஸ்ரீ வாமனவதாரம் - குரு
- ஸ்ரீ பரசுராமாவதாரம் - சுக்ரன்
- ஸ்ரீ கூர்மவதாரம் - சனி
- ஸ்ரீ மச்சாவதாரம் - கேது
- ஸ்ரீ வராகவதாரம் - ராகு
- ஸ்ரீ பலராமவதாரம் - குளிகன்

என்று, பெருமாளின் அவதாரங்கள் கிரகங்களோடு தொடர்புடையவைகளாக கூறப்பட்டுள்ளது. அதுபோலவே, சோழ நாட்டில் உள்ள நவகிரக ஸ்தலங்களைப்

Volume 1, Issue 1, November 2020 E-ISSN: 2583-0880

போல, பாண்டிய நாட்டில் உள்ள நவதிருப்பதிகளும் நவகிரகஸ்தலங்களாகக் கருதப்படுகின்றன. அவை,

- ஸ்ரீவைகுண்டம் - சூரிய ஸ்தலம்
- வரகுணமங்கை (நத்தம்) - சந்திரன் ஸ்தலம்
- திருக்கோளூர் - செவ்வாய் ஸ்தலம்
- திருப்புளியங்குடி - புதன் ஸ்தலம்
- ஆழ்வார்திருநகரி - குரு ஸ்தலம்
- தென்திருப்பேரை - சுக்ரன் ஸ்தலம்
- பெருங்குளம் - சனி ஸ்தலம்
- இரட்டைத் திருப்பதி (தேவர்பிரான்) - ராகு ஸ்தலம்
- இரட்டைத் திருப்பதி (அரவிந்த லோசனர்) - கேது ஸ்தலம்

**கள்ளபிரான் சுவாமி கோயில்**

தூத்துக்குடி மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களில் அமைந்துள்ள நவதிருப்பதிகளில் முதலாவது சூரியஸ்தலமாக அமைந்துள்ளது. இக்கோயிலின் அமைவிடம் ஸ்ரீவைகுண்டம் ரயில் நிலையத்திலிருந்து 1 கி. மீ தொலைவிலும், திருநெல்வேலியில் இருந்து 30கி.மீ தொலைவிலும் அமைந்துள்ளது.

**தலவரலாறு:** கோமுகன் என்னும் அசுரன், பிரம்மாவிடமிருந்து வேத நூல்களை அபகரித்துச் சென்றான். இதனால் பிரம்மனின் படைப்புத் தொழில் பாதிக்கப்பட்டது. பிரம்மா மனம் வருந்தி, மகாவிஷ்ணுவை மனதில் இருத்தி தாமிரபரணி ஆற்றங்கரையில் தவமிருந்தார். இதனைக் கண்ட பெருமாள், பிரம்மனுக்கு காட்சி தந்தார். பிரம்மனின் வேண்டுகோளின்படி இங்கேயே வைகுண்டநாதர் என்ற பெயருடன் எழுந்தருளினார். பிரம்மனும் தாமிரபரணி தீர்த்தத்தினை எடுத்து பெருமாளுக்கு அபிஷேகம் செய்வித்த காரணத்தாலும், நதிக்கரையில் கலசத்தை நிறுவியதாலும் கலச தீர்த்தம் என அழைக்கப்படுகிறது.

பல வருடங்களுக்கு முன்பு இக்கோயில் வழிபாடுகளின்றி, பூமிக்குள் புதையுண்டு கிடந்தது. இச்சமயத்தில், அரண்மனை மாடு, மேய்ச்சலுக்கு செல்லும்

Volume 1, Issue 1, November 2020 E-ISSN: 2583-0880

போது தினமும், அங்குள்ள ஒரு புற்றின்மேல் பாலை சுரந்துகொண்டு இருந்தது. இதனை அறிந்த பாண்டிய மன்னன் அந்த இடத்தை தோண்டச் செய்தார். புதையுண்டு கிடந்த கோயிலை மீட்டெடுத்து பாண்டிய மன்னர் பால் அபிஷேகத்திற்கு ஏற்பாடு செய்தமையால் பெருமாளுக்கு பால் பாண்டி என்ற பெயரும் உண்டானது.

**தலச்சிறப்பு**

வைகுண்டநாதப் பெருமாளின் பக்தர் காலதூஷகன் என்ற திருடன். இந்த காலதூஷகன் பல இடங்களில் திருடியவற்றில் பாதியை கோயில் சேவைக்கும், மீதியை மக்கள் சேவைக்கும் செலவிட்டான். ஒருமுறை மணப்படை என்ற ஊரில் அரண்மனைப் பொருள்களை திருடச்சென்ற போது காலதூஷகனின் ஆட்கள் அரண்மனை காவலர்களிடம் பிடிபட்டார்கள். அவர்கள் மூலம் காலதூஷகனின் இருப்பிடம் அறிந்த காவலர்கள், அவனை சிறை எடுக்கச் சென்றனர். அப்போது தானே திருடன் வடிவில் வைகுந்தப் பெருமாள் அவர்களுடன் அரண்மனைக்குச் சென்றார். அவரை விசாரித்த அரசரிடம், வயிற்றுக்கு இல்லாத குறைதான் திருடினேன் எனவும், நாட்டில் ஒருவனுக்கு உணவு, பொருள் பற்றாக்குறை என்றால் அதற்கு, அந்நாட்டை ஆளும் மன்னன் சரியான விதத்தில் அரசாளவில்லை என்று தான் அர்த்தம். இந்தப் புராணத்தைக் கேட்கும் போது 'தனி ஒருவனுக்கு உணவில்லையெனில் ஜெகத்தினை அழித்திடுவோம்' என்ற மகாகவி பாரதியின் வீர முழக்கம் தான் நினைவுக்கு வருகிறது. இவ்வாறு தன் முன் நின்று ஒரு திருடனால் தைரியமாக பேச முடியாது என்பதை உணர்ந்த மன்னன், வந்திருப்பது பெருமாளே என அறிந்தார். தான் செய்த தவறையும் உணர்ந்தார். பெருமாள் திருடனது வடிவில் வந்தாலும் அனைவரையும் மயக்கும் அழகிய தோற்றத்தில் இருந்த படியால் அன்று முதல் கள்ளபிரான் என்று அழைக்கப்பட்டார்.

**விஜயாசன பெருமாள் திருக்கோயில் (வரகுணமங்கை).**

விஜயாசன பெருமாள் கோயில் தூத்துக்குடி மாவட்டம் நத்தம் என்ற கிராமத்தில் அமைந்துள்ளது. சந்திரன் ஸ்தலமாக அமைந்துள்ளது. ஸ்ரீவைகுண்டத்தில் இருந்து 2 கி.மீ தொலைவிலும், திருநெல்வேலியில் இருந்து 32 கி.மீ தொலைவில் சந்திரன் ஸ்தலமாக அமைந்துள்ளது.

Volume 1, Issue 1, November 2020 E-ISSN: 2583-0880

**தல வரலாறு:** முன்னொரு காலத்தில் ரேவா நதிக்கரையில் புண்ணியகோசம் என்னும் இடத்தில் வேதவித் என்ற அந்தணன் வாழ்ந்து வந்தார். அவர் தன் தாய், தந்தை, குரு ஆகியோரை வணங்கி வாழ்ந்து வந்தார். அவர்களுக்கு வேண்டிய பணிவிடைகளையும் செய்து வந்தார். தனது பெற்றோரது காலத்திற்குப் பிறகு இறைவனை, பெருமாளை எண்ணி கடும் தவம் புரிய நினைத்தார். அவர் இவ்வாறு நினைத்தவுடன் பெருமாள் ஒரு பிராமண ரூபத்தில் தோன்றி ஸஹ்ய மலைகளின் நடுவே உள்ள வரகுணமங்கை என்னும் திருப்பதிக்குச் சென்று தவம் புரியும் படி கூறினார். உடனே வேதவித் வரகுணமங்கை சென்று தவம் இருந்தார். இவரது தவத்தினை ஏற்ற பெருமாள் வேதவித் முன் தோன்றினார். பெருமாளிடம் வேதவித், இந்த வரகுணமங்கை தலத்தில் விஜயாசனன் என்ற திருநாமத்துடன் எழுந்தருள வேண்டும் என வேண்டினார். அவ்வாறே பெருமாளும் இத்தலத்தில் விஜயாசன பெருமாளாக வீற்றிருந்து அனைவருக்கும் அருள் புரிகிறார்.

**திருக்கோளூர் வைத்தமாநிதி பெருமாள் திருக்கோயில்**

நவதிருப்பதிகளில் செவ்வாய் தலமாக விளங்கும் இந்த திருக்கோளூர் திருநெல்வேலியில் இருந்து சுமார் 36 கி.மீ அமைந்துள்ளது.

**தலவரலாறு:** செல்வத்திற்கு அதிபதியான குபேரன் அளகாபுரியில் சிறப்புடன் வாழ்ந்து வந்தான். ஒரு சமயம் மிகுந்த அன்புடனும், பக்தியுடனும் சிவபெருமானைத் தரிசிக்க கைலாயம் சென்றான். அந்த அழகிய பொழுதில் சிவனும் பார்வதியும் குபேரனுக்கு ஒருசேரக் காட்சி தந்தனர். மிகுந்த பக்திப் பெருக்குடன் சிவனைக் காணச் சென்ற குபேரன், தன் தாய் போன்ற பார்வதி தேவியை தீய எண்ணத்துடன் நோக்கியதாக பார்வதி தேவி குபேரன் மீது கடும் கோபம் கொண்டார். அந்த கோபத்தின் உக்கிரத்தில் குபேரனுக்கு சாபமிட்டாள் பார்வதி தேவி. 'குபேரனது உருவம் விகாரம் அடையவும், அவனிடம் உள்ள செல்வங்களும், நவநிதிகளும் குபேரனை விட்டு அகலட்டும் என்றும், குபேரனுக்கு ஒரு கண் பார்வை அற்றுப் போகட்டும்' என்றும் சாபமிட்டாள். குபேரனும் தனது தவறினை உணர்ந்து சிவனிடம் சென்று முறையிட, அவரும் அன்னை பார்வதியிடம் சென்று மன்னிப்புக் கோரச்

சொன்னார். அவ்வாறே பார்வதியிடம் அடிபணிந்து மன்னிப்புக் கோரினார் குபேரன். அந்நிலையில் பார்வதி தாயார், குபேரனிடம், இனி உனக்கு கண் பார்வை வராது, உன் உடல் விகாரம் குறையாது, ஆனால் இழந்த நிதிகளை, அவை சென்று அடைந்துள்ள வைத்தமாநிதி பெருமாளை வேண்டி தவம் புரிந்து பெற்றுக்கொள் எனக் கூறி அனுப்பினாள். குபேரனும் அதுபோலவே வைத்தமாநிதி பெருமாளை வேண்டி தவம் புரிந்து பாதி நிதியைப் பெற்றான். பெற்ற அந்த செல்வங்களை ஒரே இடத்தில் நிலைத்து இல்லாமல் எல்லோருக்கும் பரவலாகக் கிடைக்கும் வண்ணம் லக்ஷ்மி தேவியிடம் கொடுத்தான். தொடர்ந்து ஒரே நபரிடம் கொட்டிக் கிடக்கும் செல்வம் இருக்கும் இடத்தில் தர்மம் நிலைக்காது என்பதும், அங்கே அதர்மம் ஆள ஆரம்பித்துவிடும் என்பதும், அதனாலேயே செல்வம் ஒருவரிடத்தில் நிலையாக இல்லாமல் சுழன்று கொண்டே இருக்க வேண்டும் என்பது பெருமாள் அனுகிரகம். தர்மதேவன் நிலையாக இங்கேயே தங்கி இத்திருக்கோயில் பெருமாளை வழிபாடு செய்வதாக குறிப்பிடப்பெறுகின்றது.

**திருப்புளியங்குடி காய்சினவேந்தப் பெருமாள் திருக்கோயில்**

நவதிருப்பதிகளில் புதன் ஸ்தலமாக விளங்கும் இந்த திருப்புளியங்குடி, திருநெல்வேலியில் இருந்து 32 கி;மீ தொலைவிலும், திருவரகுணமங்கையில் இருந்து 1 கி.மீ தொலைவிலும் அமைந்துள்ளது.

**தலவரலாறு:** ஒரு சமயம் ஸ்ரீ லக்ஷ்மி தேவியுடன் திருமால், கருடன் மேலேறி இப்பூவுலகைச் சுற்றி வரும்போது தாமிரபரணி நதிக்கரையில் அழகிய மணற்பரப்பைக் கண்டு மகிழ்ந்து அங்கேயே தங்கி விட்டார். பூலோகம் வந்தும் தன்னை கவனிக்கவில்லையே என்று மனம் வருந்திய பூமாதேவி, லக்ஷ்மி தேவி மீது பொறாமைக் கொண்ட பூமாதேவி, கோபித்துக் கொண்டு பாதாள லோகம் சென்று விட்டாள். இதனால் உலகம் தன் நிலை மாறி வறட்சி அடைந்தது. அனைத்து ஜீவராசிகளும் துன்புற்றனர். இதனைக்கண்ட தேவர்கள் திருமாலிடம் வந்து முறையிட்டனர். தன்னை வந்து சந்தித்த தேவர்களை சமாதானம் செய்துவிட்டு பின் லக்ஷ்மி தேவியுடன் பாதாள லோகம் சென்று பூமாதேவியை தேற்றி, பூமாதேவியின்

Volume 1, Issue 1, November 2020 E-ISSN: 2583-0880

மன வருத்தத்தைப் போக்கி மீண்டும் பூலோகம் அழைத்து வந்தனர். இவ்வாறாக பூமாதேவியை அழைத்து வந்து பூலோகம் காத்ததால் பூமிபாலகர் என்ற நாமத்துடன் நமக்கெல்லாம் அருள்பாலிக்கிறார். திருப்புளியங்குடியில் மண்மகள், மலர்மகள் இருவருடனும் பூமிபாலகராய் இங்கு எழுந்தருளியுள்ளார்.

**ஆதிநாதர் ஆழ்வார் திருக்கோயில்**

நவதிருப்பதிகளில் குரு ஸ்தலமாக விளங்குவது அருள்மிகு ஆதிநாதர் ஆழ்வார் திருக்கோயில், ஆழ்வார் திருநகரி, திருச்செந்தூர் வட்டம், தூத்துக்குடி மாவட்டம். ஆதிநாதர் ஆழ்வார் திருக்கோயில், தூத்துக்குடி மாவட்டத்தில் அமைந்துள்ளது. இந்த திருக்கோயில் மற்றொரு நவதிருப்பதியான ஸ்ரீவைகுண்டத்தில் இருந்து 5கி.மீ தொலைவிலும், திருநெல்வேலி திருச்செந்தூர் சாலையில், திருநெல்வேலியில் இருந்து 35 கி;.மீ தொலைவிலும் அமைந்துள்ளது.

**தலவரலாறு:** ஆழ்வார் திருநகரி என்ற பெருமை மிகு ஊருக்கு தன்பொருநல், ஆதிசேத்ரம், குருகாசேத்ரம், திருக்குருகூர் என பல்வேறு பெயர்கள் உள்ளன. குருகு என்றால் சங்கு என்பது பொருள். அவ்வாறு ஆற்றில் மிதந்து வந்த சங்கு, இத்தல பெருமாளை வணங்கி மோட்சம் பெற்றதால் திருக்குருகூர் என்ற பெயர் வந்தது என்றும், பெரும் வெள்ளத்தால் உலகமே அழிந்து, மீண்டும் உருவானபோது முதலில் உண்டான இடம் என்பதால் ஆதிசேத்ரம் என்றும், நாம்மாழ்வார் கோயில் கொண்டு இருந்ததால் ஆழ்வார் திருநகரி என்றும் பெயர் வந்ததாகச் சொல்லப்படுகிறது. ஒரு சமயம் மகாவிஷ்ணுவின் அம்சமாக விளங்கும் வியாச முனிவரை அவரது பிள்ளையாகிய சுகமுனிவர், இந்த குருகாசேத்ரத்தின் மகிமையினைக் கூறுமாறு கேட்டுக் கொண்டார். அதற்கிசைந்து வியாச முனிவரும் திருமாலுக்கு மிகவும் பிரியமான இந்த திருத்தலத்தின் மகிமையை கூறத் தொடங்கினார்.

**திருக்கோயில் அமைப்பு**

திருக்கோயில் ஊரின் நடுநாயகமாக அமைந்துள்ளது. திருக்கோயிலின் முன்புறம் பந்தல் மண்டபம் என அழைக்கப்படும் கல் மண்டபம் அமைந்துள்ளது. இந்த கல் மண்டபத்தைத் தாண்டி, மாட வீதியைத் தாண்டிச் சென்றால் ராஜகோபுரம் வருகிறது. கோயிலின் உள்ளே பலிபீடமும், அதனை அடுத்து கொடிமரமும்

Volume 1, Issue 1, November 2020 E-ISSN: 2583-0880

அமைந்துள்ளன. கருடர் சன்னதியைத் தாண்டிச் சென்றால் ஆதிநாதனின் மூலவர் சன்னதி அமைந்துள்ளது. இத்திருக்கோயிலில் கருடன் அமைப்பு சற்று வித்தியாசமாக உள்ளது. கருட பகவான் எல்லா கோயில்களிலும் கை கூப்பி வணங்கிய நிலையில் அமைந்திருப்பார். இத்திருக்கோயில் மட்டும் கைகளில் அபஹஸ்தமும், நாகரும், சங்கு சக்கரத்துடனும் காணப்படுகிறார். பின்னர் ராமர் சன்னதி, சேனை முதலியார் சன்னதி, பொன்னீந்த பெருமாள் சன்னதியையும் காணலாம். உட்பிரகாரத்தில் வேணுகோபாலன் சன்னதியும், ஞானபிரான் சன்னதியும், ஞானபிரான் கருடனும், ஆதிநாயகி சன்னதியும், பன்னிரு ஆழ்வார் அறையும் அமைந்துள்ளன. இராப்பத்து மண்டபத்தினை அடுத்து உறங்காப்புளி என்றும் திருப்புளி என்றும் அழைக்கப்படும் இக்கோயில் தலவிருட்சம் அமைந்துள்ளது. இதன் பின்புறம் பரமபத வாசல் அமைந்துள்ளது. கோயிலின் உட்பிரகாரத்தில் நம்மாழ்வாருக்குத் தனி கோயில் உள்ளது. அதனை அடுத்து நாதமுனி சன்னதி, யாகசாலை, பன்னிரெண்டு ஆழ்வார் சன்னதி, நரசிம்மர் சன்னதி, திருவேங்கடமுடையான் சன்னதிகள் அமைந்துள்ளன. ஆதிநாதர் சன்னதியின் வெளிபிரகாரத்தில் கண்ணாடி மண்டபம், கம்பர் அறை அமைந்துள்ளன. கோயில் மதிலுக்கு வெளியே ஸ்ரீ பட்சிராஜர் சன்னதியும், கிருஷ்ணர் சன்னதியும், அனுமன் சன்னதியும் அமைந்துள்ளன.

**சிற்பக்கலை:** இத்திருக்கோயில் சிற்பக்கலையிலும் சிறந்து விளங்குகிறது. இத்திருக்கோயிலில் சிற்பக் கலைக்கு மகுடம் வைத்தாற்போல் குழல் தூண்களும், கல் நாதஸ்வரமும், கல் படிமங்களும், இசைத் தூண்களும் உள்ளன. இங்குள்ள தூண்களில் இரண்டு துவாரங்கள் போடப்பட்டுள்ளன. இரு பக்கமும் இருவர் நின்று கொண்டு மாறி மாறி ஊதினால் சங்கின் ஒலியும், எக்காள ஒலியும் ஏற்படுகிறது. இத்திருக்கோயிலில் கல்லால் ஆன நாதஸ்வரம் ஒன்று உள்ளது. நாதஸ்வரத்தின் அடிபாகத்தில் பித்தளைப்பூண் போடப்பட்டுள்ளது. இந்த இசைக்கருவி சுமார் 400 ஆண்டுகளுக்கு முன்னதாக கிருஷ்ணப்ப நாயக்கர் காலத்தில் கோயிலுக்குக் கொடுக்கப் பட்டதாகத் தெரிகிறது. இத்திருக்கோயில் சிற்பம், இசை, கட்டிடக்கலையில் மட்டுமல்ல ஓவியத்திலும் சிறந்து விளங்குகிறது. நம்மாழ்வார் தனிக்

Volume 1, Issue 1, November 2020 E-ISSN: 2583-0880

கோயிலைச் சுற்றி உள்ள பிரகாரச் சுவர்களில் 108 திவ்யதேசப் பெருமாள்களின் உருவங்கள் ஓவியங்களாய்த் தீட்டப் பட்டுள்ளன. பல் வேறு வரலாற்றுக் கதைகளும் ஓவியங்களாய்த் வரையப்பட்டுள்ளன.

**தென்திருப்பேரை மகரநெடுங்குழைக்காதர் திருக்கோயில்**

தென்திருப்பேரை திருக்கோயில், திருநெல்வேலியில் இருந்து திருசெந்தூர் செல்லும் சாலையில், சுமார் 35கிமீ தொலைவிலும், சுக்ரனின் ஸ்தலமாக அமையப்பெற்றுள்ளது

**தலவரலாறு:** வைகுண்டத்தில் ஒருநாள் ஸ்ரீதேவி கவலையுடன் காணப்பட்டாள். தன் பதி திருமால் தன்னைவிட பூமாதேவியிடம் தான் மிகுந்த அன்புடனும், பிரியத்துடனும் இருப்பதாக எண்ணிக்கொண்டு மனம் வருந்தினாள். தன்னுடைய இந்த வருத்தத்தினை துர்வாச முனிவரிடம் போய் சொல்லி முறையிட்டாள். தன்னை விட பூமாதேவி அழகு என்பதனால் தான் இவ்வாறு திருமால் நடந்துகொள்வதாக ஸ்ரீதேவி தானாகவே நினைத்துக்கொண்டு, துர்வாசரிடம் தன்னையும் பூமாதேவி போல வடிவத்தில் மாற்றுமாறு கூறினாள். அதற்குப் பிறகு துர்வாசர் பூமாதேவியைக் காணச் சென்ற வேளையில், திருமாலுடன் இருந்த பூமாதேவி தன்னை சரியான விதத்தில் விருந்தோம்பல் புரியாமலும், மதிக்காமலும் அலட்சியம் செய்வதைக் கண்டு கோபமுற்று, பூமாதேவியிடம், நீ ஸ்ரீதேவியின் உருவத்தைப் பெறுவாய், என சாபமிட்டார். தான் செய்த தவறினை உணர்ந்த பூமாதேவி, முனிவரிடம் சாப விமோசனம் கேட்க, தாமிரபரணியின் கரையிலே அமைந்துள்ள தென்திருப்பேரை என்னும் தலத்திற்கு வந்து ஓம் நமோ நாராயணாய என்ற மந்திரத்தை மனதாரச் சொல்லிவர, பங்குனி பௌர்ணமி, முழு நிலா நாளன்று, ஆற்று நீரை அள்ளி எடுக்கும் போது இரண்டு மகர குண்டலங்கள், மீன் வடிவிலான காதில் அணியும் அணிகலன்கள், பூமாதேவிக்குக் கிடைத்தது. அதே நேரத்தில் திருமால் பூமாதேவி முன் தோன்ற, தனக்குக் கிடைத்த காதணிகளை திருமாலுக்குக் கொடுத்து அணிந்து கொள்ளுமாறு பூமாதேவி தன் அன்புக் கணவரிடம் கொடுக்க, திருமாலும் அதனை விருப்பமுடன் அணிந்து கொண்டார். அந்த நிமிடமே பூமாதேவி தன் சுய

Volume 1, Issue 1, November 2020 E-ISSN: 2583-0880

உருவத்தினை அடைந்தாள். இந்த திருத் தலத்திலே பூமாதேவி, லக்ஷ்மி தேவியின் உருவத்தில், வடிவத்தில் காட்சி கொடுப்பதால், இத்தலம் திருப்பேரை என பெயர் பெற்றது. இன்றும் இத்தல பெருமாள் மகரகுண்டலங்களுடன் காட்சி தருகிறார். அதனாலேயே, இத்தல இறைவன் மகரநெடுங்குழைக்காதன் என அழைக்கப்படுகிறார்.

**திருக்குளந்தை வேங்கடவான திருக்கோயில்**

நவதிருப்பதி திருத்தலங்களில் சனி ஸ்தலமாக விளங்குகிறது. திருக்குளந்தை திருத்தலம், திருநெல்வேலியில் இருந்து திருச்செந்தூர் செல்லும் சாலையில் சுமார் 38கி.மீ தொலைவிலும், மற்றொரு நவதிருப்பதியான திருப்புளியங்குடியில் இருந்து 5கி.மீ தொலைவிலும், இன்னொரு நவதிருப்பதியான ஸ்ரீ வைகுண்டத்தில் இருந்து 7கி.மீ தொலைவிலும் அமைந்துள்ளது.

**தலவரலாறு:** முன்னொரு காலத்தில் துலைவில்லி மங்கலம் என்ற ஊருக்கு அருகிலே தடாகவனம் என்ற தலம் இருந்தது. அத்தலத்தில் வேதஸாரன் என்ற அந்தணர், தனது மனைவி குமுதவல்லியுடன் வாழ்ந்து வந்தார். தங்களுக்கு குழந்தை பாக்கியம் வேண்டி இறைவனை வழிபட்டு வந்தனர். இவர்களது வேண்டுகோளை ஏற்ற திருமாலின் அருளினால் இந்தத் தம்பதியினருக்குப் பெண் குழந்தை ஒன்று பிறந்தது. அக்குழந்தைக்கு கமலாதேவி என்று பெயரிட்டு அழைத்தனர். தனது பெற்றோரின் அரவணைப்பில் பாதுகாப்பில் சிறப்புடன் வளர்ந்து வந்த கமலாதேவி, பெருமாள் மேல் உள்ள பெரும் பக்தியின் காரணமாக, இறைவனையே கணவனாக அடைய விரும்பினாள். பெற்றவர்கள், நட்புவட்டம், உறவினர் என யார் சொல்லியும் கேளாமல், திருமாலை எண்ணி தவம் இயற்றினாள்.

இவ்விளம் பெண்ணின் கடும் தவத்தினை கண்ட விஷ்ணுபிரான், கமலாதேவி முன் தோன்றி, 'நீ இவ்வாறு கடுந்தவம் புரிவதன் நோக்கம் என்ன' எனக் கேட்டார். அதற்கு கமலாதேவி, ஸ்ரீமந் நாராயணனையே மணம் புரிந்து வாழ விரும்புவதாகக் கூறினாள். அதற்கு சம்மதம் தெரிவித்து திருமாலும் கமலாதேவியை திருமணம் செய்துகொண்டார். இவ்வாறாக கமலாதேவி என்னும் பாலிகை தவம் செய்த வனம் என்பதால் பாலிகாவனம் என்ற பெயர் உண்டானது. வேதஸாரனும் தான் அன்றாடம்

Volume 1, Issue 1, November 2020 E-ISSN: 2583-0880

வழிபடும் பெருமாளே, தன் மகளை தன் இதயத்தில் இருத்தி உள்ளதை எண்ணி எண்ணி மனம் மகிழ்ச்சியுற்றார். அன்றாடம் பெருமாளை மனதார நினைத்து மிகுந்த மகிழ்ச்சியுடன் பூஜை செய்து வந்தார்.

**பெருமான் மாயக் கூத்தாடிய வரலாறு**

ஒரு நாள் வேதஸாரனின் மனைவி குமுதவல்லி ஆற்றங்கரையில் நீர் எடுக்கச் சென்றிருந்த வேளையில், அம்சநாரன் என்ற அரக்கன் அவளை கடத்திச் சென்று இமயமலைச் சாரலில் சிறை வைத்தான். தனது அன்பு மனைவியை அரக்கன் ஒருவன் கவர்ந்து சென்றதை பெருமாளிடம் கூறி, தன் மனைவியை மீட்டுத் தர மன்றாடினான் வேதஸாரன். அவனது அழுகுரலுக்கு மனமிறங்கி தனது கருடவாகனத்தில் இமயமலை சென்று அம்சநாரனிடம் இருந்து குமுதவல்லியை மீட்டு வந்தார் திருமால். பாலிகாவனத்தில் திருமால் குடிகொண்டிருப்பதை அறிந்த அந்த அரக்கன் இந்த வனத்திற்கு வந்து பெருமானுடன் போரிட்டான். திருமால், அந்த அரக்கனை போரில் வென்று வதம் செய்து அரக்கனது தலை மேல் ஏறி நர்த்தனமாடினார். அதற்குப் பிறகு இத்தல இறைவனுக்கு தேவர்கள் அனைவரும் கங்கை நீரால் திருமஞ்சனம் செய்வித்தனர். நடனமாடிய காரணத்தினாலேயே இத்தல இறைவனுக்கு சோரநாட்டியன் என்றும் மாயக்கூத்தன் என்றும் பெயர் வந்தது. அரக்கனுடன் ஏற்பட்ட போரில் வெற்றிபெற கருடாழ்வார் பெருமானுக்கு உதவிய காரணத்தினால் இன்றும் இத்தல உற்சவ மூர்த்தியுடனும், தாயாருடனும் கருடாழ்வாருக்கு ஒரே ஆசனத்தில் இடமளிக்கப்பட்டுள்ளது. இத்திருத்தலத்திலும் சிற்பங்களின் பேரழகு கண்ணைக் கவர்கிறது மனதையும் சேர்த்து. பல தூண்கள் சிற்பங்களின் அழகால் நிறைந்திருந்தாலும் குறிப்பாக ஒரு தூணில் குதிரையும் யாழியும் கலந்த ஒரு மிருகத்தை வாகனமாகக் கொண்டு கல்கி அவதாரம் வாளுடன் தோற்றமளிப்பது தனித்துவமாக உள்ளது, வேறெங்கும் இல்லாத வடிவம். இத்திருக்கோயிலில் பல வருடங்களுக்கு முன்பாக வாசத்தடம் என்ற குளம் பிரசன்ன ஜோதிடம் மூலமாக கண்டுபிடிக்கப்பட்டு சரி செய்யப்பட்டுள்ளது. திருக்கோயிலின் தெற்குப்புறமாக கழுநீர் தொட்டியான் என்ற சன்னதி உள்ளது. திரு மடப்பள்ளியில் இருந்து வரும் பிரசாத நீர், இவரது பாதம் வழியாகத்தான் செல்கிறது. திருக்குளந்தை பெரிய அளவிலான குளங்கள், வளம் மிக்க

Pandian Tamil Journal of Temple Studies
Volume 1, Issue 1, November 2020 E-ISSN: 2583-0880

வயல்கள் சூழ்ந்த பசுமையான பூமியாகும். இங்கு, மூலவர் ஸ்ரீனிவாச பெருமாள் நின்ற கோலத்தில் பெரிய உருவத்துடன் காட்சி தருகிறார். பொதுவாக வைணவத் தலங்களில் பெருமாளின் திருவடி தரிசனம் பெரிய பாக்கியமாகக் கருதப் படுகிறது. அதன் காரணமாகவே, இத்தல பெருமாளின் திருவடியை நன்றாக தரிசிக்க அர்த்த மண்டபத்திற்கு வெளியே பெரிய கண்ணாடி ஒன்று உயரத்தில் வைக்கப்பட்டுள்ளது புதுமையான ஒன்றாகும்.

**திருத்தொலைவில்லிமங்கலம் தேவர்பிரான் திருக்கோயில் (இரட்டை திருப்பதி)**

நவதிருப்பதிகளில் ராகு ஸ்தலமான திருத்தொலைவில்லிமங்கலம் திருத்தலம், திருநெல்வேலியில் இருந்து திருச்செந்தூர் செல்லும் பாதையில், திருநெல்வேலியில் இருந்து சுமார் 39 மஅ தொலைவிலும், மற்றொரு நவதிருப்பதியான பெருங்குளத்தில் இருந்து சுமார் 5 மஅ தூரத்திலும், இன்னொரு நவதிருப்பதியான ஆழ்வார்திருநகரியில் இருந்து 2 மஅ தொலைவிலும் அமைந்துள்ளது.

**தலவரலாறு:** திருப்புளியங்குடி என்ற புண்ணியமிகு திருத்தலத்திற்கு சற்று அருகாமையில் மலர்கள் நிறைந்த, நெல் வயல்களால் சூழ்ந்த, பசுமையும் இயற்கையின் வண்ணமும் நிறைந்த ஒரு திருப்பதியாக திருத்தொலைவில்லிமங்கலம் அமைந்துள்ளது. இந்த திருத்தலத்தில் பல காலங்களுக்கு முன்பாக ஆத்திரேய கோத்திரத்தில் தோன்றிய ஒரு முனிவர் வாழ்ந்து வந்தார். சுப்ரபர் என்ற திருநாமம் கொண்ட அந்த முனிவர் யாத்திரையாக பயணம் செய்து வந்து கொண்டிருந்த வேளையில், இந்த தொலைவில்லிமங்கலம் சேத்திரத்தை அடைந்தவுடன், இவ்விடத்தின் அழகான, எழிலான சூழ்நிலை கண்டு, இந்த இடத்தில் ஒரு யாகம் செய்ய எண்ணினார். அதனால் இந்த இடத்தை யாகம் செய்வதற்காக சுத்தம் செய்து உழுது பண்படுத்தினார். அவ்வாறு சுத்தம் செய்யும்போது அங்கே ஒரு தராசையும் வில்லையும் கண்டார். இங்கே எப்படி இவை வந்ததென்று எண்ணி வியப்படைந்தார். இவை எக்காலத்தில், யாரால் கொண்டுவரப்பட்டன என்று நினைத்துக்கொண்டே அவற்றை தன் கையால் எடுத்தார். அந்த முனிவரின் கை பட்டதும், அந்த தராசு ஒரு

Pandian Tamil Journal of Temple Studies
Volume 1, Issue 1, November 2020 E-ISSN: 2583-0880

பெண்ணாகவும், அந்த வில் ஒரு ஆணாகவும் உரு மாற்றம் பெற்றன. அவர்கள் இருவரும் தங்களுக்கு ஏற்பட்ட சாபத்தில் இருந்து வெளி வந்தனர்.

அவர்கள் இருவரையும் பார்த்து முனிவரும், அவர் கூட இருந்த பக்த கோடிகளும், 'நீங்கள் எப்போது, எதனால், யாரால் இதுபோல வில்லாகவும் தராசாகவும் உரு மாறினீர்கள்' எனக் கேட்டனர். அதற்கு அத்தம்பதியினர், 'நான் வித்யாதரன், இவள் என் மனைவி, நாங்கள் இருவரும் குபேரனது சாபத்தால் இந்நிலையை அடைந்தோம், அவரிடமே எங்களுக்கு சாப விமோசனம் கேட்டோம், அதற்கு குபேரன், இவ்வாறு நீ வில்லாகவும், உனது பத்தினி தராசாகவும் வெகு காலத்திற்கு நிலத்தில் அழுந்தி இருக்க வேண்டும், சில காலம் சென்றபின் ஆத்ரேயசுப்ரபர் என்ற முனிவர் எந்த இடத்திலும் யாகம் செய்ய மனமில்லாமல் இந்த தலத்திற்கு வந்து சேர்ந்து யாகம் நடத்த நிலத்தை உழுவார். அந்த நேரத்தில் நீங்கள் சாபம் நீங்கப் பெறுவீர்கள்' என்று கூறினார். அன்றிலிருந்து நாங்கள் இந்த உருவத்திலேயே இந்நிலத்தில் புதைந்து கிடக்கிறோம். உங்கள் புண்ணியத்தால் சாபம் நீங்கப் பெற்றோம் என்று அந்த தம்பதியினர் கூறினர். அதன் பிறகு முனிவர்கள் யாகத்தை செய்து முடித்து விஷ்ணு பெருமானை ஆராதனை செய்தனர். அங்கு எழுந்தருளிய பெருமானை வணங்கி, 'இத்தலத்தில் நீங்கள் தேவர்பிரான் என்ற பெயருடன் பக்தர்களுக்கு அருள்பாலிக்க வேண்டும்' என்று வேண்டினர். இந்த தலத்தில் வில்லும், துலை என்னும் தராசும் முக்தி அடைந்த காரணத்தினால், இவ்விடம் திருத்தொலைவில்லிமங்கலம் என்ற பெயருடன் விளங்க வேண்டும் என்றும் பிரார்த்தனை செய்தனர். ஆத்ரேயசுப்ரபர் கேட்ட இந்த வேண்டுகோளை ஏற்று அதனை அங்கீகரித்தார் விஷ்ணு பெருமான்.

**திருத்தொலைவில்லிமங்கலம் அரவிந்த லோசனர் திருக்கோயில் (இரட்டை திருப்பதி)**

நவதிருப்பதிகளில் கேது ஸ்தலமான திருத்தொலைவில்லிமங்கலம் திருத்தலம், திருநெல்வேலியில் இருந்து திருச்செந்தூர் செல்லும் பாதையில், திருநெல்வேலியில் இருந்து சுமார் 39கி.மீ தொலைவிலும், மற்றொரு நவதிருப்பதியான பெருங்குளத்தில்

Volume 1, Issue 1, November 2020 E-ISSN: 2583-0880

இருந்து சுமார் 5கி.மீ தூரத்திலும், இன்னொரு நவதிருப்பதியான ஆழ்வார்திருநகரியில் இருந்து 2கி.மீ தொலைவிலும் அமைந்துள்ளது.

**தலவரலாறு:** தேவர்பிரான் திருக்கோயிலில் யாகம் செய்து மனநிறைவுடன் வாழ்ந்து வந்த சுப்ரபர், தினப்படி திருக்கோயிலின் அருகில் அமைந்திருந்த திருக்குளத்தில் இருந்து தாமரை மலர்களை பறித்து, அவற்றை மாலையாகத் தொடுத்து தேவர்பிரானுக்குச் சூட்டி மகிழ்ந்தார். நம் கையால் மலர்களைப் பறித்து மாலையாகத் தொடுத்து இறைவனுக்குச் சூடிபார்க்கும் போது கிடைக்கும் மகிழ்ச்சிக்கும், மன நிறைவிற்கும் அளவே இல்லைதான். அத்தகைய மனநிறைவுடன் தன் வேலைகளை, சுவாமி கைங்கர்யங்களை அன்றாடம் செய்து வந்து கொண்டிருந்தார் சுப்ரபர். தனக்கு மாலை சூட்டி வணங்கும் சுப்ரபரின் பக்தியில் மனம் மகிழ்ந்த தேவர்பிரான், அவர் நாள்தோறும் எங்கிருந்து தனக்கு மலர் மாலை கொண்டுவந்து அணிவிக்கிறார் என்பதை அறிய ஆசைகொண்டு, முனிவர் பெருமான் தோட்டத்தில் உள்ள பொய்கைக்கு செல்லும் நேரம் பார்த்து அவரைப் பின்தொடர்ந்தார்.

அங்கு வந்த தேவர்பிரான், அந்தப் பொய்கையின் வளமையையும், பசுமையையும், குளிர்ச்சியான தோற்றப் பொலிவும் கண்டு, முனிவரை நெருங்கி அவரிடம், 'முனிவரே, இந்த இடம் மிகவும் குளிர்ச்சி மிகுந்ததாகவும், மலர்கள் நிறைந்த இடமாகவும் இருக்கிறது, இங்குள்ள மலர்களைப் பொழியும் மரங்களின் மீது மலய மலையில் இருந்து வீசுகின்ற தென்றல் தவழ்ந்தோடுகிறது. இந்த இடம் என் மனதிற்கு மிகவும் பிடித்தமான ஒன்றாகிவிட்டது, அதனால் இந்த சுகந்தமான பொய்கையின் கரையிலேயே நான் வாசம் செய்ய விரும்புகிறேன், உமது யாகசாலையில் தேவநாதனாகவும், இந்தத் தூய்மையான தடாகத்தில் அரவிந்தலோசனாகவும் குடியிருக்கப் போகிறேன். இன்றிலிருந்து தடாகங்களின் கரையோரம் அமைந்துள்ள எனக்கும், எனக்குத் தெற்குப் பக்கமாக அமைந்துள்ள தேவர்பிரானையும் தாமரை மலர்களால் பூஜை செய்வீர்களாக', என்று சுப்ரப முனிவரிடம் கூறி அருளினார். அதுமுதல் இரட்டை திருப்பதியில் அமைந்துள்ள இரண்டு திருமாலுக்கும் தாமரை மலர்களால் அன்றாடம் அர்ச்சனை செய்து இறைவனடி சேர்ந்தார் சுப்ரப முனிவர்.

Volume 1, Issue 1, November 2020 E-ISSN: 2583-0880

**முடிவுரை**

திருநெல்வேலி மற்றும் தூத்துக்குடி பகுதிகளைச் சுற்றி அமைந்துள்ள பெருமாள் ஆலயங்கள், நவதிருப்பதி ஸ்தலங்கலாகவும், அவற்றினை நவகிரகங்கள் உடன் தொடர்பு கொண்ட திருக்கோயில்களாகவும் வரிசைபடுத்தி நவதிருப்பதி என ஒன்பது பெருமாள் ஆலயங்களை வரிசைபடுத்தி மக்கள் வழிபாட்டில் முக்கியத்துவம் பெறுவதாக அமையப்பெற்றுள்ளது. சோழநாட்டின் நவக்கிரக தலங்களும் பாண்டியநாட்டின் நவக்கிரக தலங்களும் சைவம் மற்றும் வைணவச் சமயங்களின் வளர்ச்சியினையும், ஒற்றுமையையும் வெளிப்புயுடுது;துவதாக அமையப்பெற்றுள்ளது.

**மேற்கோள் நூல்கள்**

[1] அந்தராமன், அம்புஜம் (2006). தென்னிந்தியாவின் கோயில்கள், கிழக்கு மேற்கு புத்தகங்கள் (மெட்ராஸ்). பக். 33-43. ISBN 978-81-88661-42-8.

[2] *சாந்தி.செ,* (2019) *திருக்கோயில்களின் தேவகோட்டச் சிற்பங்களும் சமூகப் பின்னணியும்,*பன்னாட்டு கருத்தரங்கம் *சமூக நல்லிணக்கத்திற்கு திருக்கோயில்களின் பங்கு, தமிழ் துறை அழகப்பா பல்கலைக்கழகம் காரைக்குடி.* ISBN: 978-81-934510-1-4. www.researchgate.net/publication/340546743 15.10.2020.

[3] *சாந்தி.செ,* (2019) *திருக்கோயில்களின் கட்டடக்கலை நுட்பங்களும் கலைச்சொற்களும்- ஓர் ஒப்பீடு,* பன்னாட்டு கருத்தரங்கம், *கோயிற் பண்பாடு, தமிழ் பண்பாட்டுமையம் அழகப்பா பல்கலைக்கழகம். காரைக்குடி.*ISBN: 978-93-84428-37-2.

[4] *சாந்தி.செ* (2020) *கட்டிடக்கலை நுட்பங்களில் ஆவுடையார்கோயில் தமிழ்மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ் தொகுதி - 2 வெளியீடு*-2 E-ISSN: 2581-7140, DOI: 10.5281/zenodo.3628597, www.ijtlls.com

[5] *சாந்தி.செ., குணசேகரன்.எஸ்., (ஜூன்* 2020) *தூத்துக்குடி மாவட்டத்தின் முக்கிய இடங்கள் - ஒரு புவியியல் வரைபடக் கண்ணோட்டம், தொகுதி* 14, *வெளியீடு -* 6, *ஜிடியன் பல்கலைக்கழக இதழ்,* https://doi.org/10.37896/jxu14.6/274

[6] *ஜி.சேதுராமன், தமிழகச் சமுதாயப் பாண்பாட்டுக் கலை வரலாறு, மதுரை*

[7] மீனா.வி. தென்னிந்தியாவில் கோயில்கள். கண்ணியகுமாரி: ஹரிகுமார் கலை. பக். 8-9.

[8] ராஜகோபாலன்.எம் (1993). தமிழ்நாட்டின் 15 வைணவ கோயில்கள். சென்னை, இந்தியா: கோவிந்தசாமி பிரிண்டர்கள். பக். 155-159.

[9] ராதா, அ. பரந்தாமன, கா. “பெருங்குளம் கிராமப்புறக் கோயில் வழிபாடும் மற்றும்

திருவிழாக்களும் - ஒரு சிறப்புப் பார்வை" *தமிழ்மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ்*, தொகுதி 2, இதழ் 2, சனவரி 2020, பக். 122-129, DOI: 10.5281/zenodo.3628534.

[10] ராஜராஜன் ஆர்.கே.கே., (2018). மறந்துபோன நயாக ஓவியங்கள் - வைகுண்டம் கர்பகாவின் நான்கு சுவர்களுக்குள் திவ்யாதேனங்கள். பிரணேஷ் பப்ளிகேஷன்ஸ். சென்னை.

[11] ரமேஷ்.எம்.எஸ். (1993). 108 வைணவத் திவ்ய தேசங்கள்: பாண்டிய நாடில் திவ்ய தேசங்கள். திருமலை-திருப்பதி தேவஸ்தனம்.

[12] சூரியா (2015). ஜோதிர்லிங்கம்: இந்திய கோயில் வழிகாட்டி. பார்ட்ரிட்ஜ் பப்ளிஷிங். ப. 30. ஐ.எஸ்.பி.என் 9781482847864.

[13] ஸ்ரீனிவாசன் கே.ஆர்., பல்லவர்களின் குகைக் கோயில், இந்தியாவின் தொல்பொருள் ஆய்வு. பி .30.

## References

[1] Anantharaman, Ambujam (2006). *Temples of South India*. East West Books (Madras). pp. 33–43. ISBN 978- 81-88661-42-8.

[2] Meena.V. Temples in South India. Kanniyakumari: Harikumar Arts. pp. 8–9.

[3] Rajagopalan.M (1993). 15 Vaishnava Temples of Tamil Nadu. Chennai, India: Govindaswamy Printers. pp. 155–159.

[4] Rajarajan.R.K. (2018) Maranthupona Nayaka Oviyangal. Vaikundam Karpakavin Nanku Suvarkalukul Divyadenangal. Dinesh Publications. Chennai.

[5}Ramesh.M.S. (1993). 108 Vaishnavite Divya Desams: Divya desams in Pandya Nadu. Tirumalai-Tirupati Devasthanam

[6] Srinivasan Kr., *Cave Temple of the Pallavas, Archaeological survey of India*.P.30

[7] Sethuraman .G, Tamil Samuthaya Panpattuk Kalai Valaru, Madurai.

[8] Radha.A, Paranthaman.G, Historical View of Perunkulam Region, IJSART - Volume 6 Issue 6 – JUNE, 2020, ISSN [ONLINE]: 2395-1052. www.ijsart.com

[9] Santhi.S., (Jan 2020), *Avudaiyarkovil and its Architecture*, International Journal of Tamil Language and Literary Studies, Vol.2:Issue-2,DOI:10.5281/zenodo.3628597**,** www.ijtlls.com**,** E-ISSN: 2581-7140 Pp:13-27

[10] Santhi.S, (2019) Thirukoyilgalin Devakotta sirbangalum samugaga pinnaniyum, International Conference, Alagappa University, Karaikudi. ISBN:978-81-934510-1-4 www.researchgate.net/publication/340546743 15.10.2020

[11] Santhi.S (2019), Thirukoyilgalin Kattatakkalai Nutbangalum Kalaisorgalum – Oru Aivu, ISBN:978-93-84428-37-2 https://www.researchgate.net/publication/340858900.

[12] Santhi.S ,Gunasekaran.S, (June 2020) *The Important Places of Tuticorin District - A*

*Geographical Map Perspective*, Volume 14, Issue-6, Journal of Xidian University, https://doi.org/10.37896/jxu14.6/274, ISSN No: 1001-2400, Pp.2298-2316.

[13] Suriya (2015). Jothirlingam: The Indian Temple Guide. Partridge Publishing. p. 30. ISBN 9781482847864.

**நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி** / Author Contribution Statement: இல்லை /NIL

**கட்டுரையாளர் நன்றியுரை /** Author Acknowledgement**:** இல்லை **/Nil**

**கட்டுரையாளர் உறுதிமொழி** / Author Declaration**: இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை என்று உறுதிமொழி அளிக்கிறேன். /** I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work.

இக்கட்டுரை கிரியேட்டிவ் காமன்சு ஆட்ரிபியூசன் 4.0வின் கீழ் பன்னாட்டு உரிமம் பெற்றுள்ளது. The content of the article is licensed under **Creative Commons Attribution4.0** International License.